International Research Journal of Tamil Literary Studies

# EXPLORING TIRUMULAR'S LOVE OF THE BODY IN COGNITIVE PSYCHOLOGY

# திருமூலரின் உடலோம்பல் கொள்கையும் அறிவாற்றல் உளவியலும்

**மா. பத்ம பிரியா** [அ, *]

[அ] **தமிழ்துறை, எஸ்.எஃப்.ஆர். மகளிர் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு**

**M. Padma Priya** [a, *]

[a] **Department of Tamil, S.F.R.College for women, Sivakasi, Tamil Nadu, India.**

[*] **Corresponding Author:** **padmapriya-tam@sfrcollege.edu.in**

**Received: 01-07-2021, Accepted: 28-07-2021**

DOI: https://doi.org/10.34256/vp2131

***Abstract:*** The principles of the Siddharthas are instructive of the ideas of instability. In particular, it is advisable to go beyond the stages of yak (physical) instability, youth instability, and wealth instability and ignore worldly attachments as everything is unstable. Furthermore, it is possible that the songs sound like a body that depicts the body as an erotic state and regrets the depravity of the body. However, some Siddhas refer to the body as the state of the Lord. Notable among them is Tirumular. He loves the body as Shiva. His songs transform the ordinary human body into a body of devotion. Kayasitthi's lifestyle is revealed in the package "Udale Sivam". When songs about Tirumular's health are studied with psychological factors, the intuitional stimuli of his life experience resonate in the songs.

***Keywords:*** *Cognitive psychology, Behaviorism, Reasoning, the power to jump from nest to nest.*

***ஆய்வுச்சாரம்:*** சித்தர்களின் கொள்கைகள் நிலையாமை கருத்துக்களை போதிப்பன ஆகும். குறிப்பாக யாக்கை(உடல்) நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை என்ற படிநிலைகளைக் கடந்து அனைத்தும் நிலையற்றவை என உலகப் பற்றுக்களைப் புறக்கணிக்க அறிவுறுத்துகின்றன. மேலும், உடலை சிற்றின்ப நிலைக்களனாக முன்னிருத்தி உடலின் இழிநிலைக்கு வருந்தும் பான்மையே பாடல்களில் தொனிக்கின்றன எனலாம். ஆயினும் சிற்சிலச் சித்தர்கள் உடலை இறைவனின் நிலைக்களனாகச் சுட்டுகின்றனர். அவற்றில் குறிப்பிடத்தக்கவர் திருமூலர் ஆவார். அவர் உடலை சிவமாக நேசிக்கின்றார். அவர் பாடல்கள் சாதாரண மனித உடலை பக்தி உடலாக மடைமாற்றம் செய்கின்றது. "உடலே சிவம் " என்னும் உட்பொதியில் காயசித்தி என்னும் வாழ்க்கை முறை வெளிப்படுகின்றது. திருமூலரின் உடல்நேசம் குறித்த பாடல்களை உளவியற் காரணிகளுடன் ஆய்வுசெய்தால்,அவரின் வாழ்க்கை அனுபவத்தின் உள்ளுணர்வுத் தூண்டல்கள் பாடல்களில் ஒலிக்கின்றன.இத்தகைய உளப்பாதிப்பினை உளவியல் அறிஞர்கள் அறிவாற்றல்

உளவியல் என்னும் நுட்பக் கூறுகளில் இணைத்து ஆராயுமாறு நெறிமுறைபடுத்தியுள்ளனர்.அவ்வகையில், இவ்ஆய்வுரை அறிவாற்றல் உளவியல் வழி திருமூலர் பாடல்களை ஆராய்கின்றது.

***கருச்சொற்கள்:*** அறிவாற்ற உளவியல், நடத்தையியல் ,பகுத்தறிதல், திருமூலரின் கூடுவிட்டு கூடுபாயும் திறன்.

## *முன்னுரை*

சித்தர்கள் என்போர் அறிவுநிலைப்பட்டவர் என்பது சான்றோர்களின் கருத்தாகும். சித் என்பது அறிவு,சித்தம் என்பது மனம்,சித்தி என்பது வெற்றியாகும். தொல்காப்பியர் சித்தர்களை அறிவன் என்கிறார் *(Ilampuranam, 2010)*.

மறுவில் செய்தி மூவகைக் காலமும்

நெறியின் ஆற்றிய அறிவன் (தொல்.புறத்திணையியல் .20)

"காமம், வெகுளி, மயக்கம்" இல்லாத ஒழுகலாற்றினை இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்னும் மூவகைக் காலத்திலும் வழங்கும் நெறியான் அமைத்த முழுதுணர்வுடையோன்" என இதற்கு நச்சினார்க்கினியார் உரைவகுத்துள்ளார். எனவே தொல்காப்பியர் கூறிய அறிவன், சித்தர் என நச்சினார்க்கினியர் கருதியமை உணரத்தக்கது. அத்தகைய அறிவன் திருமூலன் இயற்றிய காயசித்திப் பாடல்கள் உடலோம்பல் குறித்து விழிப்புணர்வு கூறுகின்றது.

திருமூலருக்கும் திருக்கையிலாயத்து வாழ் நந்திதேவருக்கும் தொடர்புபடுத்தி திருமூலரின் ஆன்மசக்தியின் சிறப்பு பற்றிய கதைகள் பேசப்பட்டுவருகின்றன. நந்திதேவரின் மாணக்கர் திருமூலர் என்றும் அட்டமா சக்திகள் கைவரப்பெற்றவர் என்றும் சிறப்பிக்கப்படுகின்றார். சைவஇலக்கியம் வரிசைப்படுத்திய அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகவும், இவர் பாடிய மூவாயிரம் பாடல்களை சைவத்திருமுறையில் பத்தாம் திருமுறையாகவும் தொகுத்துள்ளனர். முக்கியத்துவம் பெற்ற பதினெண் சித்தர்களுள் ஒருவராகவும் சிறப்பிடம் பெறுகிறார். திருமூலர் வரலாற்றை நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதியில் சுருக்கமாய்க் கூறியுள்ளார். இந்த ஞானியின் காலம் கி.மு 5000 வருட பழமையுடன் போற்றப்படுகிறது. தற்கால அறிஞர்கள் இவர் காலத்தை கி.பி என்று கூறுகின்றனர். சித்தர்களின் மருத்துவ அறிவினை பறைசாற்றும் சித்தமருத்துவக் கலை போன்றே மனித மனங்களுக்கு இதமான அறவுரைகளைக் கூறும் உளவியல் அறிவும் இவர்களுக்கு இருந்துள்ளது.ஆதலால்,மனித மனங்களின் பக்குவநிலைக்கு வழிகாட்டியாக விளங்கியவர்கள் சித்தர்கள் எனலாம்.இறைவனிடம் தான் பெற்ற தெய்வீக அனுபவங்களை சாதாரண மானிட மனங்களும் பெறுவதற்கு வழிகூறிய பரிவர்த்தனைகாரர்கள் எனலாம்.திருமூலர் தன் வாழ்வில் கடைபிடித்த காயசித்தி என்னும் உடலோம்பல் கொள்கைக்கான உளவியல் காரணிகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## *ஆய்வு அணுகுமுறை*

***உளவியல் ஆய்வென்பதால். இவ்ஆய்விற்குத் தேவையானத் தரவுகள் தொகுக்கப்பட்டு தனிநபர் நடத்தை*** அறிவியலை வெளிக்கொணரும் உளப்பகுப்பாய்வு முறை அணுகப்பட்டுள்ளது.மேலும்,அறிவாற்றல் உளவியலை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வில் உல்ரிக் ரிச்சர்ட் குஸ்டாவ் நெய்சர் *(Neisser)* தாமஸ் வெர்னர் மூர் *(DomThomasVerner Moore(1877-1969)* ஆகிய இருவரின் அறிவாற்றல் உளவியல் அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு, சேகரிக்கப்பட்ட தரவுகள் விளக்கமுறையில் ஆய்வுசெய்யப்பட்டுள்ளன *(Neisser, 1989).*

## *ஆய்வு முன்னோடிகள்*

உல்ரிக் ரிச்சர்ட் குஸ்டாவ் நெய்சர் ஒரு ஜெர்மன்-அமெரிக்க உளவியலாளர் மற்றும் அமெரிக்க தேசிய அறிவியல் அகாடமியின் உறுப்பினர் ஆவார். அவர் "அறிவாற்றல் உளவியலின் தந்தை" என்றும் குறிப்பிடப்படுகிறார். *1967* ஆம் ஆண்டில், நெய்சர் அறிவாற்றல் உளவியலை வெளியிட்டு ஆராய்ந்துள்ளார். *(Neisser, U. (1967). Cognitive psychology. New York Ulric Richard Gustav Neisser (December 8, 1928 – February 17, 2012) was a German-American psychologist and member of the US National Academy of Sciences. He has been referred to as the "father of cognitive psychology".)* அவருடைய ஆய்வுகள் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

தாமஸ் வெர்னர் மூர் எழுதிய அறிவாற்றல் உளவியல் என்னும் மனித உள்மன நடத்தைகள் குறித்து ஆய்வானது *(Thomas Vener Moore's Cognitive Psychology, published in 1939)* மனிதனின் புறச்செயல்களுக்கான

*காரணிகளை அகமனப் பாதிப்பின் வழி எடுத்துரைக்கிறது. ஆதலால் இத்தகைய ஆய்வும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.*

*செவ்வியல் காலக் காப்பிய மாந்தர்கள் ஓர் உளவியல் நோக்கு என்னும் செம்மொழிக்கருத்தரங்கில் இடம்பெற்ற ஆய்வுக்கட்டுரையில் சிலப்பதிகார மாதவியின் உளக் கூறுகளை ஆய்வாளர் ஆராய்ந்தமையும் ((க.சிவநேசன்(பதிப்பாசிரியர்), செவ்வியல் காலக் காப்பிய மாந்தர்கள் ஓர் உளவியல் நோக்கு,செம்மொழித் தமிழாய்வு மத்தியநிறுவனம் (மூன்று நாள் ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரை),கந்தகப்பூக்கள் பதிப்பகம்,சிவகாசி.) முன்னைய ஆய்வாக எடுத்தாளப்பட்டுள்ளது.*

## *காயசித்தி - பொருள்*

*காயம் என்பது உடல், உடலை முதுமை அடையவிடாது இளமையாக இருக்கச்செய்யும் உத்திமுறை காயசித்தியாகும். இளமையாக வாழ சித்தர்கள் வகுத்தளித்துள்ள ஓர் வாழ்வியல் பயிற்சி முறை எனலாம்."உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன் உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்று கூறும் திருமூலர், இம்மண்ணில் காயசித்தி மூலமே மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்தார் என்பர்.கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார் (குற்றாலக் குறவஞ்சி) என்ற குறவஞ்சி நூலின் கருத்து நினைவுகூறத்தக்கது.*

*காயசித்தி பெற்ற திருமூலர் திருவாவடுதுறைக்குச் சென்று, அங்கே ஓர் அரச மரத்தின் கீழ் அமர்ந்து சிவயோகத்தில் ஆழ்ந்தார். 'ஒன்று அவன்தானே' என்று தொடங்கி ஆண்டுக்கு ஒன்றாக மூவாயிரம் பாடல்கள் எழுதினார்.அவ் 3000 பாடல்களை திருமந்திரமாலை ஆக்கி இறைவனுக்குப் பாமாலைப் புனைந்தார். பின் இறைவன் திருவடி அடைந்தார் என்று திருமூலதேவ நாயனார் புராணம் சொல்கிறது.*

## *திருமூலரின் உடலிழப்புக் கதை -1*

*திருக்கயிலையிலிருந்து சிவபெருமான் அருள் பெற்று வாழ்ந்திருந்த திருமூலர். கூடுவிட்டுக் கூடு பாய்தல் முதலிய சித்திகள் கைவரப் பெற்றவர். அகத்தியரைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தில் வட கயிலை நீங்கித் தென் பொதியை நோக்கிப் பயணம் மேற்கொள்கிறார். இடைப்பட்ட பல்வேறு சிவத்தலங்களில் வழிபட்டவாறே வருகிறார்.*

*தில்லையில் கூத்தனைக் கண்டு மகிழ்கிறார். திருவாவடுதுறையில் ஆவடு தண்துறை அரனை வணங்குகிறார். இடையீடாக, காவிரிக் கரையோரக் காட்டுப்புறத்தில் ஒரு காட்சியைக் காண்கிறார். மாடு மேய்த்துக்கொண்டிருந்த மூலன் என்னும் இடையன் இறந்து கிடக்கிறான். அவன் உடலைச் சுற்றி அவன் மேய்ச்சலுக்கு அழைத்து வந்த பசுக்கூட்டம் அழுதுகொண்டு நிற்கின்றன. அழுதுகொண்டிருக்கும் மாடுகளின் துயரைத் தீர்க்க நினைக்கிறார் திருமூலர். தனக்குத் தெரிந்த கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தையால் மூலன் உடலுக்குள் சென்று திருமூலராக பசுக்களை மகிழ்விக்கிறார்.பசுக்களை ஊருக்குச் செலுத்துகிறார்.*

*கணவன் இன்னும் வீடு திரும்பவில்லையே என்று தேடி வருகிறாள் மூலனின் மனைவி. திருமூலர் இருக்குமிடம் தேடி வந்து, 'வீட்டுக்கு வராமல் ஏன் இங்கே இருக்கிறீர்கள்?' என்று அவரை தொட்டு அழைக்கிறாள். உடனே திருமூலர்,'உனக்கும் எனக்கும் தொடர்பில்லை' என்று அவளை தொடாது விலக்கினார். தன்நிலை உணர்த்தி அவ்விடம் நீங்கி காடு வந்தடைகிறார்.மறைவாக தான் ஒழித்து வைத்த மூலன் உடலைத் தேடிப் போனார் உடலைக் காணவில்லை. சிவபெருமானின் திருவிளையாடலால் உடல் காணாமல் போனதாக சேக்கிழார் பெரியபுராணத்தில் பாடியுள்ளமை நினைவுகூறத்தக்கது.*

*தண்நிலவார் சடையார், தாம் தந்தஆ கமப் பொருளை*

*மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்பக்*

*கண்ணியஅத் திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க,*

*எண்நிறைந்த உணர்வுஉடையார், ஈசர்அருள் எனஉணர்ந்தார்.*

*(பெரிய புராணம், திருமூலதேவ நாயனார் புராணம், 23)*

*குளிர்சடையில் நிலவணிந்த இறைவன், மெய்ப்பொருளை ஆகமமாக வழங்கியிருந்தான். விண்ணுக்கும் வானுலகத்தோருக்கும் உரித்தான ஆகமப் பொருளை, மண்ணுக்கும் மண்ணுலக தமிழுக்கும் திருமூலரைக்கொண்டு எட்டச் செய்ய வேண்டும் என்று திருவுளம் கொண்டான். திருமூலர் தன்னுடைய பழைய உடலுக்குள் பாய்ந்துவிட்டால் அகத்தியரைக் கண்டு குலாவிவிட்டுத் திருக்கயிலை திரும்பிவிடுவார். அப்படித் திரும்பிவிட்டால் ஆகமப் பொருள் மண்ணில் வழங்காமல் போய்விடும். ஆகவே, இறைவன் கயிலை யோகியாரின் உடலை மறைத்துவிட்டான். இது இறைவனின் திருவுளம் என்று தெளிந்த திருமூலர் இடையன் மூலனின் உடலில் திருமூலராகவே தொடர்ந்தார் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*திருமூலரின் உடலிழப்புக் கதை –2*

அகத்தியர் எழுதிய வைத்திய ரத்தினச் சுருக்கம் 360 என்னும் நூலில் திருமூலரைப் பற்றி வேறொருகதை வழங்கப்படுகிறது. திருமூலர் ஆகாயவெளியில் வந்துகொண்டிருக்கும்போது ஓர் இளவரசி மணமான மறுநாளே தன் கணவனைப் பறிகொடுத்து கையறுநிலை பாடுகிறாள்.

'தச்சன் அடித்த தளம் பெரிய கட்டிலிலே

ஒக்க நெருங்கி ஒரு நாளும் இருக்கலையே;

விதி வந்தால் என்ன கொஞ்சம் விலகி வரலாகாதா?

சாவு வந்தால் என்ன கொஞ்சம் தள்ளி வரலாகாதா?'

அவளது துயரத்தைக் கண்டு வருந்திய திருமூலர், தன் உடலை ஒளித்துவைத்துவிட்டு இறந்துகிடந்த அவளது கணவனின் உடலில் புகுந்தார். அவ் ஆடவனைக் கண்டு உறவினர் அனைவரும் மகிழ்ந்தனர். கணவனும் மனைவியுமாக இன்புற்று இருந்தனர். ஒரு நாள் மோக வேகத்தில் கணவன் உண்மையைச் சொல்லிவிடுகிறான். மனைவிக்குப் பிரிவுப் பயம் தொற்றிக்கொள்கிறது. இவன் பழைய உடம்புக்குத் திரும்பி நம்மைவிட்டு நீங்கிப் போய்விடுவானே என்றெண்ணி ஆட்களை விட்டுத் திருமூலரின் பூத உடலைக் கண்டுபிடித்து அழித்துவிடுகிறாள். தன் உடலைத் தேடி வந்த திருமூலர் அதைக் காணாத நிலையில், வேறு வழியில்லாமல், தான் அப்போது தங்கியிருந்த உடலிலேயே தங்கித் தவத்தைத் தொடர்ந்தார்.

இரண்டு கதைகளுக்கும் பொதுக்கூறு உடல் இழப்புப் போராட்டம் ஆகும்.

## உல்ரிக் ரிச்சர்ட் குஸ்டாவ் நெய்சரின் உளவியல் சிந்தனைகள்

உளவியல் உட்கூறுகளில் ஒன்று அறிவாற்றல் உளவியல் (Cognitive psychology) ஆகும். இத்துறை ஆர்வலர்கள் மனதின் செயல் முறைகளைப் புறநடத்தைகளுடன் விளக்குகின்றனர். மனிதனின் புரிதல், ஞாபகம், பேசுதல், சிக்கலுக்கானத் தீர்வு காணுதல் போன்றன மனதின் அகச்செயல்முறைகளை அடியொற்றியே புறநடத்தையாகின்றன என்று உல்ரிக் ரிச்சர்ட் குஸ்டாவ் நெய்சர் விளக்குகின்றார். பிராய்டின் உளவியலில் இருந்து இவர் ஆய்வு மாறுபட்டதாக ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். மனித நடத்தைவாதத்தை (Behaviorism)அறிவார்ந்து அணுகும் அறிவியல் முறையாக இம்முறையைக் கூறலாம்.

இவ்அறிஞர்கள் தன்னைச் சோதித்துப் பார்க்கும் தற்சோதனை (Introspection) முறையில் அறிவியல் இல்லை என்று வாதிடுகின்றனர். மேலும் அறிவாற்றல் உளவியல் உள் மனதில் புதைந்துள்ள நம்பிக்கை, ஆசை, சிந்தனை, அறிவு மற்றும் ஊக்கம் போன்ற நிலைகளை வெளிப்படையாக நிரூபிக்கிறது என்றும் கருதுகின்றனர். அறிவாற்றல் உளவியலின் தந்தை என்றழைக்கப்படும் ரிச்சர்ட் குஸ்டாவ் நெய்சர் மனித மனமெனும் நினைவகம் பெரும்பாலும் புனரமைக்கப்பட்டு பின் படைப்புச் செயல்களில் பிரதிபலிக்கும் என்கிறார். ஆதலால் இவரை சிறந்த உளவியலாளராகப் பாராட்டியுள்ளனர். மேலும்,2002 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட '20 ஆம் நூற்றாண்டின் பொது உளவியலாளர்" என்ற கருத்துக்கணிப்பில் இவர் உளவியல் அறிஞர்களில் 32 வது இடம் பெற்றுள்ளார். இவ்அறிஞரின் கருத்துடன் திருமூலரின் பாடலை ஒப்புநோக்கினால் சில உண்மைகள் உளவியல் காரணிகளுடன் புலப்படுகின்றன.

- உடல் காணமல் போவதால் ஏற்படும் பறிதவிப்பு மனநிலை
- உடலைத்தேடுதல்
- தன் உடல் கிடைக்காததால் மூலன் உடலில் தங்க முடிவெடுத்தல்.
- சிவயோகியார் திருமூலனாக பெயர்மாற்றம் பெறுவது.

இங்கு நெய்சர் கூறுவது போல், "நினைவில் வைக்கப்பட்டவை அத்தியாயமாகத் தோன்றுவதும், உண்மையில் தொடர்ச்சியான தொடர் நிகழ்வுகள் பிரதிபலிக்கப்படுவதும் ஒப்புநோக்கத்தக்கது. திருமூலரின் உடலோம்பல் சிந்தனைக்கு உடலிழப்பே அடித்தளமாகிறது என்பது ஆய்வில் புலப்படுகிறது.

### உடலோம்பலுக்கான உளவியற் காரணிகள்

திருமூலரின் காயசித்திப் படல்களை அறிவாற்றல் உளவியல் வழி ஆய்ந்தால் ஒளி உடம்பை அடைவதே உயர்நிலை என்கிற சித்தாந்தம் வெளிப்படுகின்றது. தன் உடலிழப்பு காரணமாக உடம்பை வளர்க்கும் உபாயம் அறிய முற்படுகிறார் என்பதும் புலப்படுகின்றது.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்

திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்

வீரகை பதிப்பகம்

உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே

உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.

(திருமந்திரம். மூன்றாம் தந்திரம், காயசித்தி உபாயம், பாடல் எண்.1)

மேற்கண்ட பாடலில் திருமூலர், உடம்பு அழியுமாயின் அதனைப் பெற்றுள்ள உயிரும் அழிந்து போகும் ஆதலால் அவ்வுடம்பின் துணைக்கொண்டு உயிரை நலம் பெறச் செய்தேன் என்கிறார். உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன் என்று தான் கடைப்பிடித்த காயசித்தி முறையின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகின்றார்.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்

உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்

உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று

உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

(திருமந்திரம். மூன்றாம் தந்திரம், காயசித்தி உபாயம், பாடல் எண்.2)

திருமந்திரம் காயசித்திப்பகுதியில் இடம்பெறும் முதல் பாடலுக்கும் இரண்டாம் பாடலுக்கும் இடையிலான உளவியற்கூறுகள் கவனிக்கத்தக்கன. உடலை நேசிக்கும் திருமூலரின் உளக்கோலம் இங்கு நினைவகமாக வெளிப்படுகிறது.

உடலை முன்னம் இழுக்கு என்றிருந்தேன் என்று அவர் சுட்டுவது அவரது முன்வாழ்க்கையில் ஏற்பட்ட உடலிழப்பு போராட்டத்தைக் குறிக்கிறது. சிவயோகியாரான இச்சித்தர் திருமூலராக பெயர்பெற்ற முன்கதை இங்கே உடம்பினுக்குள் உறுபொருள் கண்டேன் என்று உடலை தெய்வீக நிலைக்கு இட்டுச்செல்கிறார்.

## முடிவுரை

அறிவாற்றல் அணுகுமுறை உள்மனநடத்தைகளை அறிவியல் பூர்வமாக சோதனை செய்கிறது. அத்தகைய உண்மையின் அடிப்படையில் திருமூலரின் உடல்நேசிப்புப்பாடல்கள் ஒப்புநோக்கத்தக்கவையாக உள்ளன. உள்ளம் பெருங் கோயில்; ஊனுடம்பு ஆலயம் என்று திருமூலர் சுட்டுவதும் உடலிழப்பு வேதனையின் வெளிப்பாடாகும். திருமூலரின் முன்வாழ்க்கைப் போராட்டங்களில் உடலின் மதிப்பு அகமனத்தேடலாக இருந்ததால் புறநடத்தையில் உடல் வரமாக, இறையின் உறைவிடமாக உயர்வு பெற்றுள்ளது என்று ஆய்வு வழி அறியலாம்.

## REFERENCES


Balayan, A.B., (2016) Speech through Periyapuranam, Gaura Publishing, Chennai

Ilampuranam, (2010) Tholkappiyam, Sharada Press, Chennai.

K. Sivanesan (Editor) (2017), Classical period epic A psychological perspective on humans Center for Classical Tamil Studies (Three Day Research Seminar Article), kanthagappookal Publishing, Sivakasi.

Surprenant, A.M., Neath, I. T. V. Moore’s (1939) Cognitive Psychology. Psychonomic Bulletin & Review 4, 342–349 (1997). https://doi.org/10.3758/BF03210791

Neisser, U., (1989). Concepts and conceptual development: Ecological and intellectual factors in categorization, Cambridge University Press, New York, USA.

Puliyurkesikan, (2010) Courtallam Kuravanchi, Kaura Publishing, Chennai.

Thirumoolar, (2014) Thirumandiram, 10th Thirumurai, Saivanul Foundation, Chennai,


**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License